## இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு - 2013

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநரை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

2010 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை நடைமுறைச் சொத்தின் கீழ் பெறவேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்ட 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 491,244 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 26,067,297 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 29,099,096 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3,031,799 தொகையால் குறைவடைந்திருந்ததுடன் புத்தாக்குனர்களுக்கு ஊக்குவிப்பினை வழங்கும் செலவினம் ரூபா 12,000,000 இனால் குறைவடைந்தமை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிறைவேற்ற வேண்டிய பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) ''பேடன்ட்'' அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குத் தகுதியான புத்தாக்குனர்களைத் தெரிவுசெய்து பேடன்ட் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஆ) இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் இலங்கையின் புத்தாக்குனர்களின் அறிவுச் சொத்துரிமை மீறப்படும் போது அவர்களின் அறிவுச்சொத்தை பாதுகாப்பதற்கான சட்ட ரீதியான உதவியை வழங்குதல்.

(இ) ''பேடன்ட்'' அனுமதிப்பத்திரத்தை பிணையாக வைத்து அரசாங்க அல்லது ஏனைய நிறுவனங்களிலிருந்து கடன் பெறக்கூடிய வகையில் வணிக ரீதியில் பெறுமதியுடைய புத்தாக்கங்களுக்கு சிபார்சு வழங்குதல்.

(ஈ) உள்நாட்டு, வெளிநாட்டு சந்தை வசதிகளை கண்டறிவதற்காக அனுசரணை வழங்குதல்.

(உ) புத்தாக்கங்களுக்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் அனைவருக்கும் திறந்த ஆராய்ச்சிக் கூடமொன்றை ஆரம்பித்தல்.

(ஊ) புத்தாக்குனர்களிற்கிடையே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்காக மாதாந்த கூட்டங்களை நடாத்துதல்.

(எ) பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் நிரந்தரமாக சங்கங்களை அமைத்தல்.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

**4.2.1 புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்ட கடன்கள்**

புத்தாக்குனர்களாக இனங்காணப்பட்ட 12 நபர்களுக்கு புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்காக 2008, 2009 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 10,200,000 தொகையான கடன் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தாக்குனர்களுக்காக வழங்கப்பட்ட கடனுக்கான தவணைப் பணம் மற்றும் வட்டி உரிய முறையில் அறவிடப்படாமையினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 9,534,220 தொகை அறவிடவேண்டியிருந்ததுடன் அத்தொகையை அறவிடுவதற்கு முகாமையினால் போதுமான அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,700,000 தொகையான கடன் தொகையை ஈடுபடுத்தி எவ்வித புத்தாக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆணைக்குழுவினால் 04 புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,500,000 தொகையான கடன்பணம் ஆகக்கூடிய பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு புத்தாக்கங்கள் வணிக மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் அவர்களால் கடன் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டமையினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,416,800 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**4.3 பதவியணியினர் முகாமைத்துவம்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறைவேற்று மற்றும் நிறைவேற்று தரமற்ற பதவியணிகளில் 6 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்பவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

ஆணைக்குழுவின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது 1979 இன் 53 ஆம் இலக்க புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள சகல செயற்பொறுப்புக்களையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன் நிருவாகம்

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கணக்கீ